## <u>சுருக்கம்</u>

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – பொறியியல் பிரிவு சார்நிலைப் பணி விதிகளின் கீழ் உள்ள சாலை ஆய்வாளர் நிலை–2 பணியிடங்களை நிரப்புதல் – மாவட்ட ஆட்சியர்களுக்கு தக்க நடவடிக்கை எடுக்க தெரிவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை**

**அரசாணை (நிலை ) எண். 73** **நாள் : 25.06.2014**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.790, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 5.7.1971.
2. அரசாணை (நிலை) எண்.70, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 20.03.2000.
3. அரசாணை (நிலை) எண்.163, ஊரக வளர்ச்சி (இ4) துறை, நாள் 4.72001.
4. அரசாணை (ப) எண்.152, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள் 26.03.2012.
5. அரசாணை (ப) எண்.284, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள் 30.05.2012.
6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித ந.க.எண். 80654/2011/இஇ4, நாள் 27.09.2012 மற்றும் 28.6.2013.
7. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண். 80654/ 011/இஇ4, நாள் 05.09.2013.

*****

**<u>ஆணை:</u>**

மேலே இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட அரசாணைகளில், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பொறியியல் பணியாளர்களுக்கான பணிப்பார்வையாளர் மற்றும் சாலை ஆய்வாளர்கள் பதவிக்கான பணி விதிகள் உருவாக்கி உத்திரவிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் பிரிவு சார்நிலை பணிவிதிகளின்படி சாலை ஆய்வாளர் நிலை–II பணியிடம், ஐடிஐ (Civil Draftsman) படித்தவர்களின் பட்டியலை வேலைவாய்ப்பகம் மூலம் பெற்று நேரடியாக நிரப்பப்பட வேண்டிய ஒன்றாகும்.

2. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 2011–2012ம் ஆண்டுக்கான சாலை ஆய்வாளர் நிலை–IIக்கான காலியிட மதிப்பீடு 542 என நிர்ணயிக்கப்பட்டு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. சாலை ஆய்வாளர் நிலை–II காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்ய சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொடர்புடைய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 1:5 விகிதத்தில் இனச்சுழற்சி மற்றும் முன்னுரிமை அடிப்படையில் தகுதியான நபர்களின் பட்டியல் வழங்கக் கோரியதில் 99 பணியிடங்களுக்கு 1:5 விகிதத்தின்படியும் 145 பணியிடங்களுக்கு 1:5 விகிதத்திற்கு குறைவாகவும், மொத்தம் 771 நபர்கள் தகுதிவாய்ந்தோர் என விவரப் பட்டியல் பெறப்பட்டது. எனவே, காலியாக உள்ள பணியிடங்களை ஒப்பீடு செய்கையில் வேலைவாய்ப்பகம் மூலம் பெறப்பட்ட பட்டியல் 1:5 விகிதத்திற்கு குறைவாக இருந்தமையால், சாலை ஆய்வாளர் நிலை–2 பணியிடங்களை பூர்த்தி செய்திட அரசாணை (நிலை) எண்.70, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 20.03.2000–ல் உள்ள கல்வித்தகுதி பணிவிதிகளில் குறிப்பிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தின் I.T.I. Civil Draughtsmen சான்றிதழ் என்பதற்கு பதிலாக அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தின் I.T.I. Civil Draughtsmen or Surveyor Course அல்லது அங்கீகரிக்கப்பட்ட கல்வி

(த.பி.பா.)

நிறுவனத்தின் Diploma in Civil Engineering சான்றிதழ் எனத் திருத்தம் செய்து ஆணை வழங்குமாறும், மேலும், இவ்வாறு திருத்தம் செய்து வழங்கினால்தான் சாலை ஆய்வாளர் நிலை–2ல் காலியாகவுள்ள 542 பணியிடங்களையும் மாவட்ட ஆட்சியர்களால் பூர்த்தி செய்ய இயலும் என்றும், எனவே, மேற்குறிப்பிட்ட கல்வித்தகுதி குறித்த திருத்தம் செய்து விரைவில் ஆணை பிறப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டார். மேற்படி கருத்துருக்கள் ஆய்வு செய்கையில் மேற்கூறப்படும் இவ்விரு படிப்புகளும் சமமானது அல்ல என அறியப்பட்டது. மேலும் ஏற்கனவே வேலைவாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்று 1:5 விகிதாச்சாரம் இல்லாததால் கிட்டத்தட்ட 671 நபர்களின் பெயர்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளாத நிலை உள்ளது எனவும், தற்போது அவர்களை பரிசீலனை செய்யாமல், விதி திருத்தம் செய்து அதன்படி புதிய பட்டியல் வேலைவாய்ப்பகம் மூலம் பெறுவதற்கு காலதாமதம் ஆகும். பட்டய படிப்பை இப்பதவிக்கான கல்வித்தகுதியாக மாற்றம் செய்து விதிகளுக்கு திருத்தம் வெளியிட்டால் மேற்சொன்ன 671 நபர்களுக்கு வாய்ப்பு கிடைக்காமல் போகும். மேலும், I.T.I. படித்து வேலைவாய்ப்பகம் மூலம் பெற்ற பட்டியலில் உள்ளோர் வேலைவாய்ப்பகம் பரிந்துரை செய்துள்ளபடி தங்களை பணியமர்த்தக் கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்துள்ளனர். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேலே ஏழாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் 262 சாலைப் பணியாளர் நிலை–2 பணியிடங்கள் நாளதுவரை நிரப்பப்படாமல் உள்ளன எனவும் தெரிவித்திருந்தார்.

4. சாலை ஆய்வாளர் நிலை–2 பணியிடமானது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பொறியியல் பிரிவில் துவக்க நிலை பணியிடமாகும். அதனை வெகுநாட்கள் காலியாக வைத்திருப்பது நிர்வாகத்திற்கு உகந்ததாக இருக்காது என்பதால் வேறு வழிகளில் அப்பதவிகளை பூர்த்தி செய்திட அரசு பரிசீலனை செய்தது.

5. பரிசீலனைக்குப்பின், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கூறப்பட்டுள்ள சரத்துகளின்படி 1:5 விகிதாச்சாரப்படி முதல் பட்டியலில் தேர்ச்சி பெறவில்லை எனக் கூறி இரண்டாவது முறையாக வேலைவாய்ப்பகங்களில் பெறப்பட வேண்டும் எனவும், அப்படியும் தகுதிவாய்ந்த நபர்கள் இல்லையெனில் தகுதியான ஆட்கள் இல்லை என்ற சான்றிதழை வேலைவாய்ப்பகங்களிடமிருந்து பெற்று பின்னர் உள்ளூர் நாளேட்டில் விளம்பரம் செய்து I.T.I. Civil Draftsman பயின்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்ற பின் ஒரு போட்டித் தேர்வினை மாவட்ட அளவில் நடத்தி ஏற்கனவே உள்ள குழு மூலம் தகுதியான 262 நபர்களை தேர்வு செய்திட மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரை வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரை பணிக்கலாம் என இத்துறை உத்தேசித்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

நா.ச.பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல கணக்குத் துறை இயக்குநர், சென்னை–15
அனைத்து மாவட்ட கருவூல கணக்கு அலுவலர்கள்.

நகல்
மாண்புமிகு அமைச்சரின் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்) சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.